1992 மார்ச் 11]

அதேபோல ஹோமியோபதி மருத்துவர்களைப் பொறுத்த வரையில் ஹோமியோபதி கவுன்சிலில் பதிவு செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இன்னுமொன்று, இந்திய மருத்துவ மத்திய கவுன்சில் என்று ஒன்று இருக்கிறது. அதிலேயும் பதிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. இப்படி பதிவு செய்கிற முறை ஏற்கெனவே இருக்கிறது. மீண்டும் ஒரு முறை இங்கே அரசுத் துறையிலே பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால், பதிவு செய்வதற்கே ஓராண்டுக்காலம் அவர்களுக்கு ஓடிவிடும் என்கிற காரணத்தால் இது தேவையில்லை என்று கருதுகிறேன். எனவே ஏற்கெனவே இருக்கிற முறைகளை வைத்தே நம்மால் கட்டுப் படுத்திவிட முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 164,— திரு. மா. சுந்தரதாஸ். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

164—

உரிமம் பெறாமல் ஓடும் ஆம்னி பேருந்துகள்.

* 1776—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) சென்னை நகரிலிருந்து பல்வேறு வழித் தடங்களில் உரிமம் பெறாமல் ஆம்னி பேருந்துகள் அதிக எண்ணிக்கையில் ஓடுவது அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டனவா?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னையில்,

(1) சோதனையிடப்பட்ட ஆம்னி பேருந்துகள்	5,871
(2) அனுமதி சீட்டின்றி பயன்படுத்தப் பட்டவை	86
(3) சிறை பிடிக்கப்பட்டவை ..	21
(4) வசூலிக்கப்பட்ட தொகை .. ரூ.	81,525

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் பர்மிட் இல்லாமல் இத்தகைய பஸ்கள் ஓட்டப்படு கிறதா? பள்ளிகளுக்காக ஓடுகிற பஸ்களைக் கூட சம்மர் வெகேஷனிலும், சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களிலும்

[1992 மார்ச் 11

கூட அவர்கள் ஆம்னி பஸ்களாக ஓட்டுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இது போன்று பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. பள்ளிகளில் இயக்கப்படுகிற மினி பஸ்கள் விடுமுறை நாட்களில் சுற்றுப் பயணத்திற்காக விடுகிறார்களே தவிர தனியாக ஆம்னி பஸ்ஸாக அவர்கள் இயக்குவதில்லை. அப்படி யாராவது ஆம்னி பஸ்ஸாக இயக்குகிறார்கள் என்றால், அதை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் கடுமையான நடவடிக்கை அவர்கள் மீது மேற்கொள்ளப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆம்னி பஸ்கள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயிருந்தும் சென்னை வந்து கொண்டிருக்கின்றன. இது ரீஜினல் டிரான்ஸ்போர்ட் ஆபீசர்களுக்கும், போலீசுக்கும் தெரியாதது அல்ல. ஆம்னி பஸ் என்று சொன்னால், ரெகுலர் பஸ் போல, நம்முடைய திருவள்ளுவர் பஸ் போல அவர்கள் அங்கே புக்கிங் ஆபீஸ் வைத்து ஓட்டி கொண்டு இருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அவர்களுக்கே ரெகுலரைஸ் செய்து ரூட் பெர்மிட்டைக் கொடுத்து விடலாமே. ஒரு சீட்டுக்கு இவ்வளவு ரூபாய் என்று சொல்லி தனியாருக்கே பெர்மிட் கொடுத்து விடலாமே ஏனென்றால் ஆம்னி பஸ் என்று அவர்கள் 5 பஸ்களை வைத்திருந்தால், அதிலே இரண்டு பஸ்களுக்கு பர்மிட் இருக்கும். இரண்டு பஸ்களை பர்மிட் இல்லாமல் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பஸ்ஸைக் கூட நம்முடைய ஆர். டி. ஓ. மற்றும் போலீஸ் செக்கிங் செய்து பிடித்ததாகத் தெரியவில்லை. அப்படி பர்மனென்ட் பர்மிட் கொடுக்கப் போவதில்லை என்று சொன்னால், இப்படி ஓடுகிற ஆம்னி பஸ்களை அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்கள் அதிகமாக ஓடுவதற்கு அரசு தடை செய்திருக்கிறது. இருந்தாலும் கூட சில பேர் மனுக்கள் செய்து வழக்கு மன்றத்திலே தடையாணையைப் பெற்று, கோர்ட் டைரக்ஷன் வாங்கி, சில பேர் ஆம்னி பஸ்களை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதையும் அரசு கவனத்திலே கொண்டிருக்கிறது. இப்போது இதைக் கவனிக்க வாகன ஆய்வாளர்கள், கிரேட்-2 என்கிற 38 பதவியிடங்களை நாம் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருக்கிற காரணத்

1992 மார்ச் 11]

தாலே, இரண்டாண்டுக் காலமாக அந்த வழக்கு நிலுவையில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே சர்வீஸ் கமிஷனிலிருந்து தேர்வு செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே இது போன்ற ஆய்வுகளை தீவிரப்படுத்துவதற்கு எங்களால் முடியாத சூழ்நிலை இருக்கிறது. எதிர்காலத்திலே இது போன்ற ஆம்னி பஸ்கள் தவறான முறையில் இயங்குவது எந்த இடத்திலேயாவது இருந்தால், உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்களுக்கு அரசு உரிமம் வழங்கியிருக்கிற அதே நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலேயும், இரவு நேரங்களில் இது போன்ற பல ஆயிரக்கணக்கான பஸ்கள் ஓடுகின்றன. இப்படி விதிமுறையை மீறி ஓட்டுகிற நிலமையை அரசு உன்னிப்பாகக் கவனித்து இது வரை எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதற்கு, முதல் கேள்விக்கான பதிலிலேயே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 165. திரு. ஆர். முருகையா பாண்டியன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

165—

கோவிலுக்குச் செல்லும் வாகனங்களுக்குப் பணம் வசூலித்தல்.

*2443 திரு. ஆர். முருகையா பாண்டியன்:

மாண்புமிகுபோக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசம் அடிவாரத்தில் உள்ள சோதனைச் சாவடியில் கோவிலுக்கு வாகனங்களில் செல்லும் பக்தர்களிடம் பணம் வசூல் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?